2008 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் சென்று விவசாயத்திற்காகக் கடன் வாங்குகிறார்கள். அப்படிக் கடன் வாங்கி விவசாயிகள் தொழில் செய்கிறபோது அவர்களுக்குத் தேவையான உரத்தை நாம் வழங்குகிறோம். அதுதான் நடைமுறையிலே இருந்து வந்தது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நினைத்து நினைத்து, உங்களுக்குச் சந்தேகம் வரும். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் கேட்டீர்கள் இல்லையா? (குறுக்கீடு) திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வாங்காத பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் கடன் வாங்கியவர்களுக்குக் கொடுத்ததுபோக மீதம் இருந்தால் வழங்குகிறார்கள். இல்லாவிட்டால், தனியார் கடை லைசென்ஸ் கொடுத்த Agents, private-ல் இருக்கிறார்கள். அவர்கள்மூலமாக விற்பனை செய்யப்படுகிறது, அவர்களிடத்திலே அந்த உரத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதியில், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வலையங்குளம் ஊராட்சியில் நேற்றையதினம் ஒரு கோயில் திருவிழாவில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். ஆய்விலே இருக்கிறது, பார்த்து எடுப்போம். அறிவிப்பு வந்தவுடனே எடுக்கப்படும். (குறுக்கீடு) பார்க்கலாம், அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு எதுவுமில்லை.

5. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 24-வது மற்றும் 25-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(இ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்